ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ... සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

# வினாத்தாள் I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் :......................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ❊ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ❊ **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❊ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ❊ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- ❊ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன்.<br>மொத்தப் புள்ளிகள் சரியாகும். | <br>V/I/T/CH |

PAPERMASTER.LK

[பக். 2 ஐப் பார்க்க

1. பின்வரும் உரு பற்றிய சரியான கூற்று யாது?



(1) ஒரு கடிகாரமும் ஆசிரியர் மேசை ஒன்றும் உள்ளன.

(2) ஆறு பிள்ளைகள் இருந்தும் ஆசிரியை ஒருவர் இல்லை.

(3) இறாக்கையில் புத்தகங்களும் ஒரு பூச்சாடியும் உள்ளன.

2. பின்வரும் உருவில்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே




(1) Ⓐ , Ⓔ ஆகும்.

(2) Ⓑ , Ⓒ ஆகும்.

(3) Ⓐ , Ⓓ ஆகும்.

3. பின்வரும் கவிதையில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடை யாது?

தோட்டத்தில் நடந்து வந்து கம்புகளைக் கண்டுபிடித்து
.................. மூலைகளிலும் மரக் கம்பங்கள் நாட்டி,
துணி ஒன்றை விரித்து கூரையை ..................
நாங்கள் .................. வீட்டினை அமைத்து

| | | | |
|---|---|---|---|
| (1) | பல | வைத்து | அழகான |
| (2) | நான்கு | அமைத்து | விளையாட |
| (3) | சில | கொண்டுவந்து | விளையாட |

4. பயணங்கள் செல்லும்போது நானும் கூடச் செல்கிறேன்
விரிந்தெழுந்ததுமே நானும் சேவையினைச் செய்கிறேன்
வெயிலையும் மழையையும் நன்றாக அறிந்துள்ளேன்
என்னைப் பற்றி அறிந்திராதார் எவருமே இல்லையே

இக்கவிதையின் கருத்து மிக நன்றாகப் பொருந்தக்கூடியது

(1) குடைக்கு (2) தொப்பிக்கு (3) மேற்சட்டைக்கு

5. பின்வரும் வாக்கியத்தில் உள்ள இரு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொற் சோடி யாது?

புத்தகங்கள் எமது கண்கள் போன்றனவாகும். அவற்றை .................. வைத்திருந்து வாசிக்கும் .................. மேம்படுத்துவோம்.

(1) துப்புரவாக, ஆற்றலை

(2) பாதுகாப்பாக, பழக்கத்தை

(3) கவனமாக, போக்கை


PAPERMASTER.LK

OPPO A5 2020
2022/12/18 12:18

6. ஒரு குறித்த மாதத்தின் முதலாம் நாள் ஒரு திங்கட்கிழமையாகும். கடைசி நாள் ஒரு புதன் கிழமையாகும். அம்மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?

(1) 28 (2) 30 (3) 31

7. கீழே தரப்பட்ட உருவில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கை யாது?



(1) 7

(2) 8

(3) 9

8. கீழே தரப்பட்ட நெய்யரியில் கிடையாகவும் கீழ்நோக்கியும் எல்லா நிரைகளிலும் எல்லா நிரல்களிலும் ❀, ●, △ என்னும் மூன்று உருக்களும் இடப்படுமாறு அடைப்புகளை நிரப்புதல் வேண்டும். இதற்கேற்ப ? உள்ள இடத்தில் இடப்பட வேண்டிய உரு யாது?

| | | |
|---|---|---|
| | ❀ | △ |
| | | ● |
| ? | | ❀ |

(1) △

(2) ●

(3) ❀

9. அருகில் உள்ள உருவில் இருக்கும் அம்புக்குறியின் தலை (↑) கீழ்நோக்கி இருக்குமாறு அரைச்சுற்றுத் திருப்பப்படும்போது காணப்படத்தக்க விதத்தைக் காட்டும் உரு பின்வருவனவற்றில் யாது?





(1)



(2)



(3)

10.




மேற்குறித்த உருவில் உள்ள ஆண் பிள்ளை பின்பக்கமாகவும் பெண் பிள்ளை முன்பக்கமாகவும் ஏனைய நிலைப்பாடுகளை மாற்றாமல் திரும்பும்போது அவர்கள் இருவரும் உள்ள விதத்தைக் காட்டும் சரியான உரு யாது?



(1)



(2)




(3)

PAPERMASTER.LK




O A5 2020

**11.** பின்வரும் உரு நிரையினால் காட்டப்படும் நான்கு சந்தர்ப்பங்களையும் ஒரு குறித்த ஒழுங்குமுறையில் ஒழுங்குபடுத்தும்போது ஒரு குறித்த செயன்முறை குறிப்பிடப்படுகின்றது. அதன் சரியான ஒழுங்குமுறை இடம்பெறும் விடை யாது?





(1) A, C, B, D (2) C, D, B, A (3) D, B, C, A

**12.** ஒரு சுவரில் தொங்கவிடப்பட்டுள்ள ஐந்து பலகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. அவை எல்லாவற்றையும் பயன்படுத்தி ஒரு மிகவும் சரியான வாக்கியத்தைப் பெறுவதற்குக் **குறைந்தபட்சம்** எத்தனை பலகைகளின் அமைவை மாற்றுதல் வேண்டும்?





(1) இரண்டின் (2) மூன்றின் (3) நான்கின்

**13.** நான்கு கோலங்கள் வீதம் இடம்பெறும் மூன்று உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



உரு 1 உரு 2 உரு 3

உரு 1 இலும் உரு 2 இலும் இருக்கும், ஆனால் உரு 3 இல் **இல்லாத** கோலம் யாது?

(1)  (2)  (3) 

**14.** தரப்பட்டுள்ள இலக்க உருவில் கீழ்நோக்கி அல்லது கிடையாக அடுத்தடுத்து இருக்கும் இரு இலக்கங்களின் மொத்தம் 9 ஆக இருக்குமாறு இலக்கங்கள் இடப்படும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாது?

| | | |
|---|---|---|
| 1 | 7 | 2 |
| 8 | 1 | 7 |
| 6 | 5 | 4 |
| 3 | 6 | 3 |

(1) 7 (2) 8 (3) 9

**15.** ஒரு கடிகாரத்தில் நேரம் மு.ப 4.30 ஆகும். அவ்விடத்திலிருந்து நிமிடமுள் ஆறு தடவை மணித்தியால முள்ளைக் கடந்துசென்று 12 ஐ நோக்கி இருக்கும் போது அக்கடிகாரத்தில் நேரம் யாது?

(1) மு.ப. 10.00 (2) மு.ப. 11.00 (3) நண்பகல் 12.00

**16.** ஒரு கைக்கடிகாரம் அதன் முகம் மேல்நோக்கி இருக்குமாறு ஒரு மேசை மீது கிடையாக வைக்கப்பட்டுள்ளது. நேரம் பி.ப. 3.00 ஆக இருக்கும்போது அதன் மணித்தியால முள் வடக்கு நோக்கி இருந்தது. நேரம் பி.ப. 3.45 ஆக இருக்கும்போது அக்கடிகாரத்தின் நிமிட முள் நோக்கி இருக்கும் திசை யாது?

(1) தெற்கு (2) மேற்கு (3) கிழக்கு


**17.** ஒரு மண்டபத்தில் உள்ள ஆசனங்கள் 301 தொடக்கம் 500 வரைக்கும் இலக்கமிடப்பட்டுள்ளன. இவற்றில் 3, 5 ஆகிய இலக்கங்கள் அடுத்தடுத்து இடப்பட்டிருக்கும் எத்தனை ஆசனங்கள் உள்ளன?

(1) 11 (2) 12 (3) 13

PAPERMASTER.LK

[பக். 5 ஐப் பார்க்க

**18.** கடதாசிப் பட்டிகளை ஒட்டித் தயாரித்த ஐந்து சங்கிலித் துண்டுகள் கீழே தரப்பட்டுள்ளன.



இவை எல்லாவற்றையும் ஒரு தனிச் சங்கிலியாகத் தயாரிப்பதற்குக் கழற்றி ஒட்ட வேண்டிய கடதாசிப் பட்டி வளையங்களின் **குறைந்தபட்ச** எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5


**19.** கோலத்திற்கேற்ப ? குறிக்குப் பொருத்தமான உரு யாது?






(1) (2) (3)

**20.** ஓர் உருவின் 4 துண்டுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை ஒரு சதுரம் கிடைக்குமாறு சரியாக இணைக்கும்போது கிடைக்கும் உருவில் உள்ள இலக்கம் யாது?



(1) எட்டு (2) ஆறு (3) மூன்று

**21.** உரு A இல் உள்ள வடிவத்தில் இருக்கும் தாள் முறிந்த கோடுகள் வழியே மடிக்கப்பட்டு உரு B இல் உள்ள வடிவத்தைப் பெற்று, அது அதில் உள்ள முறிந்த கோடு வழியே வெட்டித் துண்டாக்கப்பட்டது. இங்கு கிடைக்கும் துண்டுகளின் எண்ணிக்கை யாது?



உரு A




உரு B

(1) 2
(2) 4
(3) 6


**22.** ஒரு நிரையில் சங்கருக்கும் முரளிக்குமிடையே ஐந்து பிள்ளைகளும் முரளிக்கும் கண்ணனுக்குமிடையே எட்டுப் பிள்ளைகளும் நிற்கின்றனர். சங்கருக்கும் கண்ணனுக்குமிடையே நிற்கத்தக்க பிள்ளைகளின் எண்ணிக்கையாக **அமையாதது**

(1) 2 ஆகும். (2) 13 ஆகும். (3) 14 ஆகும்.

**23.** கீழே தரப்பட்டுள்ள உரு A இன் நடுவில் இருக்கும் புள்ளி மீது உரு B இன் நடுவில் இருக்கும் புள்ளி இருக்குமாறு உரு A மீது உரு B ஐ வைக்கும்போது கிடைப்பதாக ஒரு மாணவனால் வரையப்பட்ட மூன்று உருக்கள் C, D, E ஆகியவற்றினால் காட்டப்படுகின்றன.



A B



C D E

மாணவன் வரைந்த உருக்களிடையே சரியான உருக்கள்

(1) C, D ஆகியனவாகும். (2) C, E ஆகியனவாகும். (3) D, E ஆகியனவாகும்.

PAPERMASTER.LK

PO A5 2020
2/12/18 12:18

[பக். 6 ஐப் பார்க்க


**24.** பிள்ளைகளின் குழாம் ஒன்றை மூவர் வீதமுள்ள குழுக்களாக்கும்போது ஒரு பிள்ளையும், நால்வர் வீதமுள்ள குழுக்களாக்கும்போது இரு பிள்ளைகளும், ஐவர் வீதமுள்ள குழுக்களாக்கும்போது நான்கு பிள்ளைகளும் எஞ்சியிருக்கின்றனர். இக்குழாம் எத்தனை பிள்ளைகளைக் கொண்டுள்ளது?

(1) 54 (2) 64 (3) 94

**25.** பாட்டிக்கும் பாட்டனுக்கும் 4 மகள்மார் உள்ளனர். அவர்கள் நால்வரும் திருமணமாகியுள்ளனர். அந்நான்கு குடும்பங்களிலும் நான்கு பிள்ளைகள் வீதம் உள்ளனர். அவர்கள் எல்லோரும் உயிர்வாழ்கின்றனர். எனின், இக்குழாத்தில் எத்தனை நபர்கள் உள்ளனர்?

(1) 21 (2) 22 (3) 26

**26.** நெய்யரியில் உள்ள பாதைகளில் நீளங்கூடிய பாதை யாது?




(1) A இலிருந்து B வரையுள்ள பாதை
(2) C இலிருந்து D வரையுள்ள பாதை
(3) E இலிருந்து F வரையுள்ள பாதை

**27.** "நாம் உணவின்றிக் கூடுதலான காலத்திற்கு இருக்கத்தக்கதாக இருந்தாலும் நீரின்றி இருக்கத்தக்க காலம் மிகக் குறுகியதாகும். உடலில் நீரின் அளவு குறையும்போது நாம் பல்வேறு நோய்களுக்கு ஆளாவோம். ஒரு நாளுக்குத் தேவையான நீரின் அளவைக் குறித்தவாறு குடிப்பதன் மூலம் உடலின் தொழிற்பாட்டை உகந்தவாறு பேணலாம்."


இக்கூற்றின் ஒட்டுமொத்தமான கருத்து

(1) உணவிலும் பார்க்க நீர் கூடுதலாக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதாகும்.
(2) நோய்களிலிருந்து விடுபடுவதற்கு நீர் அவசியம் என்பதாகும்.
(3) நீரைக் குடித்தல் அத்தியாவசியம் என்பதாகும்.

**28.** இறுதிப் பெறுபேறுக்கு ஒரு காரணம் **குறிப்பிடப்படாத** வாக்கியம் யாது?

(1) ரேவதி காலையிலேயே எழுந்து ஆயத்தமாகிப் பாடசாலைக்குப் புறப்பட்டாள்.
(2) கீதா நன்றாகப் படித்தமையால் பரீட்சையில் சித்தியடைந்தாள்.
(3) பேருந்து வராமையால் சங்கரி சந்தைக்கு நடந்து செல்ல நேரிட்டது.

**29.** இங்கு சில வட்டங்களைக் கொண்டு வரையப்பட்டுள்ள ஓர் உரு தரப்பட்டுள்ளது. பின்வரும் எந்த விடை அவ்வுருவுடன் பொருந்துகின்றது?



(1) பூக்கள், தாமரைப் பூக்கள், செந்தாமரைப் பூக்கள், வெண்தாமரைப் பூக்கள்
(2) மரங்கள், மாமரங்கள், தென்னைகள், கமுகுகள்
(3) விலங்குகள், நாற்கால் விலங்குகள், மான்கள், கிளிகள்


**30.** ஒரு பணப்பையில் 8 நாணயத் தாள்கள் உள்ளன. அவற்றின் பெறுமானங்கள் ரூ. 20, ரூ. 50, ரூ. 100 ஆகும். ரூ. 50 நாணயத் தாள்களின் எண்ணிக்கையும் ரூ. 100 நாணயத் தாள்களின் எண்ணிக்கையும் சமம். பணப்பையில் இருக்கத்தக்க **கூடுதலான** பணம் யாது?

(1) ரூ. 270 (2) ரூ. 490 (3) ரூ. 600


PAPERMASTER.LK

[பக். 7 ஐப் பார்க்க

31. ஒரு பற்சில்லு சுழலும்போது மற்றைய இரு பற்சில்லுகளும் சுழலத்தக்கதாக இணைக்கப்பட்ட A, B, C என்னும் மூன்று பற்சில்லுகள் உருவிற் காட்டப்பட்டுள்ளன.




பற்சில்லு B ஆனது அம்புக்குறியினாற் காட்டப்படும் திசையில் சுழலும்போது A, C ஆகிய இரு பற்சில்லுகளும் சுழலும் திசைகள் இடம்பெறும் விடை யாது?

(1) 



(2) 

(3) 


32. பின்வரும் அடைப்புகள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்ட புத்தகம் அதற்கு முன்னாலும் மேலேயும் பெயர்கள் குறிப்பிடப்பட்ட பிள்ளைகளினால் வாசிக்கப்பட்டுள்ளது. பாவை விளக்கும் வேறொரு புத்தகமும் நான்கு பிள்ளைகளினாலும் வாசிக்கப்பட்டிருப்பின், வெற்றிடத்தில் குறிப்பிடப்பட வேண்டிய புத்தகம் யாது?

| | | | பவானி |
|---|---|---|---|
| | | சங்கர் | பாவை விளக்கு |
| | கமலா | மலர்விழி | பொன்னியின் செல்வன் |
| கீதா | பாவை விளக்கு | வாழ்க்கை விளக்கம் | |


(1) வாழ்க்கை விளக்கம்
(2) பொன்னியின் செல்வன்
(3) மலர்விழி

33.  எனின், 

ஆக இருப்பதற்குப் பொருத்தமான உருத் தொகுதி யாது?


(1)  (2)  (3) 

34. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு A, B, C என்னும் மூன்று ஒத்த பாத்திரங்களில் நீர் உள்ளது. இவற்றில் A இலும் பார்க்க B இல் கூடுதலாக உள்ள நீரின் அளவும் B இலும் பார்க்க C இல் கூடுதலாக உள்ள நீரின் அளவும் சமம். A இல் உள்ள நீரின் அளவினதும் C இல் உள்ள நீரின் அளவினதும் மொத்தம் B இல் உள்ள நீரின் அளவின் இரு மடங்கிற்கு





(1) குறைவாகும். (2) கூடியதாகும். (3) சமமாகும்.

35. உருவில் ஒரு சிறிய காணி ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள விதம் காட்டப்பட்டுள்ளது. பொது எல்லையின் இரு பக்கங்களிலும் இருக்கும் பகுதிகளில் ஒரே வகைப் பூக்கள் இராதவாறு இந்த ஏழு பகுதிகளிலும் வளர்ப்பதற்குக் **குறைந்தபட்சம்** எத்தனை வகைப் பூக்கள் தேவை?



(1) 3 (2) 4 (3) 5

36. உருவில் அடைப்பு A இலிருந்து அடைப்பு B இற்குப் பின்வரும் நிபந்தனைகளுக்கேற்பச் செல்லுதல் வேண்டும்.




- அடைப்பு A இலிருந்து ஆரம்பித்தல் வேண்டும்.
- எப்போதும் ஓர் அடுத்த அடைப்பிற்குக் குறுக்கே செல்லுதல் வேண்டும்.
- ஒரு கீழ் அடைப்பிற்கு வரும்போது மீண்டும் ஒரு மேல் அடைப்பிற்குச் செல்லமுடியாது.

இதற்கேற்ப அடைப்பு A இலிருந்து அடைப்பு B இற்குச் செல்லத்தக்க பாதைகளின் **உயர்ந்தபட்ச** எண்ணிக்கை யாது?

(1) [illegible] (2) 8 (3) 10

PAPERMASTER.LK


PO A5 2020
2/12/18 12:18

[பக். 8 ஐப் பார்க்க

37. மூன்று தொப்பிகளில் ஒன்று கறுப்பு நிறமுள்ளது, ஒன்று வெள்ளை நிறமுள்ளது, ஒன்று சிவப்பு நிறமுள்ளது. கீதாவுக்குக் கறுப்பு நிறத் தொப்பி **கிடைக்காதவாறு** இம்மூன்று தொப்பிகளையும் கீதா, சங்கீதா, வருணா ஆகியோருக்கிடையே பகிர்ந்து கொள்ளத்தக்க ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட விதங்கள் எத்தனை உள்ளன?


(1) 2 (2) 4 (3) 6

38. ஒரு பெரிய மரக் குற்றியின் எல்லா முகங்களிலும் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு கறுப்பு நிறத் தீந்தை ஒரே விதமாகப் பூசப்பட்டுள்ளது. பெரிய மரக் குற்றி சிறிய சதுர மரக் குற்றிகள் கிடைக்குமாறு வரையப்பட்டுள்ள கோடுகள் வழியே வெட்டி வேறாக்கப்படுகின்றது. எந்த முகத்திலும் தீந்தை **பூசப்படாத** எத்தனை சிறிய மரக் குற்றிகள் கிடைக்கும்?



(1) 14 (2) 15 (3) 16

39. உருவில் ஒரு நகரத்தின் பரும்படிப் படத்தின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது. ஒரு சிறுவன் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு நடந்து செல்கிறான்.




- வீட்டிலிருந்து ஆரம்பித்துச் சந்தியை நோக்கிச் செல்லல்
- சந்தியின் வலப்பக்கத்தில் உள்ள பாதை வழியே முன்னோக்கிச் செல்லல்
- அடுத்ததாக எதிர்ப்படும் சந்தியில் இடப்பக்கமாகத் திரும்பிப் பாடசாலைக்குச் செல்லல்

இதற்கேற்பப் பின்வருவனவற்றில் சரியானது யாது?

(1) அவனுடைய இடப்பக்கத்தில் ஒரு குளமும் வலப்பக்கத்தில் ஒரு கடையும் காணப்பட்டன.

(2) அவனுடைய வலப்பக்கத்தில் சந்தையும் இடப்பக்கத்தில் அஞ்சல் அலுவலகமும் காணப்பட்டன.

(3) அவன் விளையாட்டு மைதானத்தைக் கடப்பதற்கு முன்பாக இடப்பக்கத்தில் தோட்டம் இருப்பதைக் கண்டான்.

40. ஒரு குறித்த நகரத்தின் பாடசாலையிலிருந்து மருத்துவமனைக்குச் செல்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் பின்வருமாறு உள்ளன.

| |
|---|
| பிரதான வாயிலினூடாக வெளியே வந்து வலப்பக்கத்திற்குத் திரும்பி 100 மீற்றர் செல்லும்போது எதிர்ப்படும் சந்தியில் இடப்பக்கத்திற்குத் திரும்பி 150 மீற்றர் செல்லும்போது வலப்பக்கத்தில் மருத்துவமனையின் பிரதான வாயில் எதிர்ப்படும். |

அதற்கேற்ப மருத்துவமனையிலிருந்து பாடசாலைக்கு வருவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களைச் சரியாக வழங்குவதற்குப் பின்வரும் வாக்கியத்தில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான தகவல்கள் முறையே குறிப்பிடப்படும் விடை யாது?

| |
|---|
| பிரதான வாயிலிற்கு வெளியே வந்து …………… திரும்பி 150 மீற்றர் செல்லும்போது எதிர்ப்படும் சந்தியில் …………… திரும்பி 100 மீற்றர் செல்லும்போது …………… பாடசாலையின் பிரதான வாயில் எதிர்ப்படும். |

(1) இடப்பக்கத்திற்கு, வலப்பக்கத்திற்கு, இடப்பக்கத்தில்

(2) இடப்பக்கத்திற்கு, வலப்பக்கத்திற்கு, வலப்பக்கத்தில்

(3) வலப்பக்கத்திற்கு, இடப்பக்கத்திற்கு, இடப்பக்கத்தில்

PAPERMASTER.LK

PO A5 2020
22/12/18 12:19

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2020

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022

# வினாத்தாள் II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ❊ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ❊ **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ❊ இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- ❊ **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
- ❊ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ❊ விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழே கோடிடுக.**
- ❊ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதி மொத்தப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

PAPERMASTER.LK

[பக். 2 ஐப் பார்க்க

**1.** பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

நான் நட்ட மாமரக்கன்று இப்போது பெரிய மரமாகி விட்டது. வீட்டின் அருகில் ஓடுகின்ற அருவியின் பக்கமாக வளைந்திருந்த மாமரக்கொப்பு காய்களினால் பாரம் நிறைந்ததாகக் காணப்பட்டது. அந்த மாமரம் ஐந்து வருடங்களுக்கு முன்னர் நான் தரம் ஒன்றிற்குச் சென்ற நாளை நினைவுபடுத்துவதற்காக எனது கைகளால் நான் நட்டதாக எனது தாயார் கூறிய விதம் இன்னமும் எனக்கு நினைவில் இருக்கின்றது. தந்தை கொண்டு வந்து தந்த அந்தச் சிறிய மாமரக்கன்றை நட்டு அம்மா, அப்பா, அக்கா ஆகியோருடன் நானும் அதனை எங்கள் குடும்பத்தின் பிள்ளையைப் போல அன்புடன் பராமரித்து வந்தோம். மரத்தில் முதன்முதலாகக் காய்த்திருந்த பழங்களை எனது வகுப்பு ஆசிரியைக்கும் நண்பர்களுக்கும் பெருமகிழ்ச்சியுடன் பகிர்ந்தளித்தேன். அனைவரும் அவற்றைப் பெரு விருப்புடன் உண்டு ஆனந்தம் அடைந்தனர். "அருணனைப் போல வகுப்பில் உள்ள ஏனையவர்களும் மரக்கன்றுகளை நடுதலும் அதனைப் பராமரித்தலும் மிகவும் முக்கியமானதாகும்" என்று கூறி ஆசிரியை எனது செயலுக்கு மதிப்பு அளித்தார்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) மாமரக்கன்று யாரால் நடப்பட்டது?

.....................................................................................................................

(ii) மாமரக்கன்று எதனை நினைவுபடுத்துவதற்காக நடப்பட்டது?

.....................................................................................................................

(iii) மாமரக்கன்றைப் பராமரித்தவர்கள் யாவர்?

.....................................................................................................................

(iv) காய்களால் பாரம் நிறைந்திருந்த மாமரக் கொப்புப் பற்றி இங்கு எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது?

.....................................................................................................................

(v) ஆசிரியை கூறியது போன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எது?

.....................................................................................................................

(vi) 'மகிழ்ச்சி' என்ற கருத்தைத் தரும் ஒத்த கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சொல்லை எழுதுக.

.....................................................................................................................

**2.** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை என்பவற்றின் தொடர்பு **சரியாயின்** '✓' எனவும் **பிழையாயின்** '×' எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) நான் உண்பதற்கு முன்னர் கைகளைக் கழுவுகின்றேன். (.........)

(ii) பரதன் அருங்காட்சியகத்தைப் பார்வையிடச் சென்றார்கள். (.........)

(iii) அக்கா நாட்டார் பாடலைத் தாளத்தோடு பாடுகின்றார். (.........)

(iv) இம்முறை நடைபெற்ற சித்திரப் போட்டியில் அவன் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டாள். (.........)

(v) காடுகளைத் துப்புரவு செய்து மழை வரும்வரை சேனைப் பயிர்ச் செய்கையாளர்கள் காத்திருந்தார்கள். (.........)

**3.** ஒருமை இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

(1) ஓடுகிறது (2) இருந்தது (3) பிரகாசிக்கின்றன

**4.** கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

காணியில் / அமைந்துள்ள / எங்கள் / உள்ளன / வீடு / அலங்காரமான / தாவரங்கள்

.....................................................................................................................

PAPERMASTER.LK

.....................................................................................................................

[பக். 3 ஐப் பார்க்க

**5.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) (1) கருவேப்பிலை (2) கறிவேப்பிலை (3) கருவப்பிலை

(ii) (1) விளையாட்டு (2) விலையாட்டு (3) விழையாட்டு

**6.** பின்வரும் வாக்கியத்தை நிகழ்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

காலையில் உழவர்கள் எருதுகளுடன் வயலுக்குச் சென்றனர்.

.....................................................................................................................

**7.** 'தொடக்கம்' என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக. ..........................................

**8.** பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

விடாது முயற்சி செய்தால் பலன் கிடைக்கும்.

.....................................................................................................................


.....................................................................................................................

**9.** பாடசாலை முடிவடைந்ததும் குகன் பசுக்கன்றுடன் விளையாடுவதற்காக வீட்டுக்கு ஓடி வந்தான். தண்ணீர் நிரம்பிய வாளியை எடுத்துக் கொண்டு சென்று பசுக்கன்றின் அருகில் வைத்துவிட்டு பக்கத்தில் அதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.
மேலே தரப்பட்டுள்ள பந்தியைத் துணையாகக் கொண்டு உதாரணம் ஒன்று வீதம் தந்து பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நபரின் பெயர் | பிராணியின் பெயர் | பொருளின் பெயர் | இடத்தின் பெயர் |
|---|---|---|---|
| (i) ................................ | (ii) .............................. | (iii) ............................. | (iv) ............................ |

**10.** ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்ட கட்டங்களுக்குள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)


(ii)


**11.** கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) the / is / pencil / My / table / on : ..................................................................... .

(ii) my / play / I / friends / with : ............................................................................ .

**12.** ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்சொல்லை** எழுதுக.

(i) Sugar : .................................... (ii) Rainbow : .....................................

**13.** 'நெலும் மல (නෙළුම් මල)' என்ற சொல்லிற்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக.

.....................................................................................................................

**14.** பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

எனக்கு பந்து தாருங்கள் : ..........................................................................................

PAPERMASTER.LK

**15.** 51030, 51300 என்ற இரு எண்களிலும் சிறிய எண்ணை **எழுத்தில்** எழுதுக.

..........................................................................................................................................

**16.** 5
7 9

அடைப்புக்குள் உள்ள எல்லா இலக்கங்களையும் கொண்டு ஒன்றினிடம், நூறினிடம் ஆகிய இடங்கள் இரண்டிலும் 5 ஐப் பயன்படுத்தி நான்கு இலக்கங்கள் கொண்ட ஓர் எண்ணை எழுதுக.

..........................................................................................................................................

**17.** பின்வரும் மூன்று எண்களையும் ஏறுவரிசையில் மீண்டும் எழுதுக.

25971, 15037, 25791 : ..........................................................................

**18.** பின்வரும் எண் கோலத்தில் அடுத்து வரவேண்டிய **இரண்டு** எண்களையும் எழுதுக.

3 , 9 , 15 , 21 , ......... , .........

**19.** நேரம் பிற்பகல் மூன்று மணி முப்பது நிமிடம் என்பது இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் (நியம) விதத்தைப் பின்வரும் அடைப்பினுள் எழுதுக.

............... : ...............

**20.** ஒரு பெட்டியில் 6 பென்சில்கள் வீதம் உள்ளன. இவ்வாறான 120 பெட்டிகளில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................................................................

**21.** 175 மாணவர்கள் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டால் ஒரு குழுவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?


..........................................................................................................................................

**22.** 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி எத்தனை 'நான்கின் பங்கு' ஆகும்?

..........................................................................................................................................

**23.** நெய்யரியில் இருக்கும் உருவின் பகுதியைச் சமச்சீரான உரு கிடைக்குமாறு பூரணப்படுத்துக.



**24.** A, B, C என்பன மூன்று நகரங்களாகும். A இலிருந்து B இனூடாக C வரையுள்ள வீதியின் நீளம் 15 km 550 m ஆகும். A இலிருந்து B வரையுள்ள வீதியின் நீளம் 7 km 750 m எனில், B இலிருந்து C வரையுள்ள வீதியின் நீளம் எவ்வளவு?

: ............ km ............ m

**25.** பொதி ஒன்றில் 2 kg 50 g அரிசியும் இன்னுமொரு பொதியில் 5 kg 750 g அரிசியும் இருந்தன. இரண்டு பொதிகளிலும் உள்ள அரிசியின் மொத்த நிறை எவ்வளவு?

: ............ kg ............ g


PAPERMASTER.LK

[பக். 5 ஐப் பார்க்க

**26.** ஒரு பாத்திரத்தில் 5150 ml நீர் இருந்தது. அதில் இருந்த நீரின் அளவை லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் எழுதுக.

: ............ l ............ ml

**27.** பொதி ஒன்றின் நிறையை அளக்கும்போது தராசின் ஒரு தட்டில் பொதியும் மற்றைய தட்டில் உருவில் காட்டப்பட்டுள்ள மூன்று படிகளும் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறெனில் பொதியின் நிறை எவ்வளவு?




: ............ kg ............ g

**28.** 15 ரூபாய் 50 சதத்துக்கு ஒரு பேனையையும் ஒன்று 75 ரூபாய் வீதம் இரண்டு அப்பியாசக் கொப்பிகளையும் வாங்கும்போது செலுத்தப்பட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

: ரூபாய் ................. சதம் ...............

**29.** ஒரு மணித்தியாலத்தில் வீதியில் சென்ற வாகனங்கள் பற்றிய தகவல்களை மாணவன் ஒருவன் அட்டவணை ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தான்.

| வாகன வகை | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| துவிச்சக்கரவண்டி | ///// ///// |
| முச்சக்கரவண்டி | ///// ///// // |
| பேருந்து | ///// /// |
| லொறி | ///// /// |

(i) எந்த வகையிலான வாகனம் அதிக எண்ணிக்கையில் சென்றது?

:...........................................................

(ii) லொறிகளை விட அதிகமாகச் சென்ற துவிச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

:...........................................................

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக**.

**30.** காற்றின் மூலம் பரவும் வித்துக்கான உதாரணமாக இருப்பது எது?

(1) மரமுந்திரிகை (2) தேங்காய் (3) எருக்கலை

**31.**

| விலங்கு | உணவு |
|---|---|
| பாம்பு | எலி, தவளை |
| மயில் | பாம்பு, நெற்கதிர் |
| மாடு | புல், வைக்கோல் |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணைக்கேற்ப அனைத்துமுண்ணித் தொகுதிக்கு உரிய விலங்கு எது?

(1) பாம்பு (2) மயில் (3) மாடு

**32.** இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுக்கு உதாரணமாக இருப்பது

(1) சாரணைக்கீரை (2) ஈரப்பலாக்காய் (3) வாழைப்பழம்

**33.** நாளாந்த உணவு வேளைகளில் தனிநபர் ஒருவருக்கு மிகவும் முக்கியத்துவம் பெறும் உணவு வேளை எது?

(1) காலை உணவு வேளை (2) மதிய உணவு வேளை (3) இரவு உணவு வேளை

**34.** விண்வெளியின் செய்மதிகளைப் பயன்படுத்திச் செய்திப்பரிமாற்ற முறையை உருவாக்க முடியும் என்று வெளிப்படுத்தியவர் யார்?

(1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

(2) ஆதர் சீ. கிளார்க்

(3) ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்

PAPERMASTER.LK

[பக். 6 ஐப் பார்க்க

**35.** ஒருவர் தனது வதிவிடச் சான்றிதழைப் பெறுவதற்குச் சந்திக்க வேண்டிய அதிகாரி யார்?
(1) அதிபர்
(2) கிராம அதிகாரி
(3) சமுர்த்தி அதிகாரி

**36.** தனிநபர் ஒருவர் நடக்கும்போது சரியாகப் பாதங்களை வைக்க வேண்டிய ஒழுங்குமுறை
(1) குதி, பாதம், விரல் நுனிகள்
(2) விரல் நுனிகள், பாதம், குதி
(3) குதி, விரல் நுனிகள், பாதம்

**37.** இனிப்புச் சுவையுள்ள உணவுகளையும் மாப்பொருள் உணவுகளையும் அதிக அளவில் உண்ணுவதைப் பின்வரும் எந்நோய் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும்?
(1) நீரிழிவு (2) இரைப்பையழற்சி நோய் (3) உயர் குருதி அமுக்கம்

**38.** போலியான, தரக்குறைவான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டால் அது பற்றி எந்த நிறுவகத்திற்கு முறைப்பாடு செய்ய வேண்டும்?
(1) கமத்தொழில் சேவை ஆலோசனை அலுவலகம்
(2) பிரதேசச் செயலகம்
(3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை

**39.** எலுமிச்சம்பழத்தை நீண்டகாலம் பழுதடையாமல் பாதுகாப்பதற்கு மூதாதையர்கள் பெருமளவில் பயன்படுத்திய முறை
(1) அவித்தல் (2) மணலினுள் புதைத்தல் (3) புகையூட்டல்

**40.** கிடையாகத் தொங்கவிடப்பட்ட சட்டக் காந்தம் ஓய்வில் இருக்கும்போது சுட்டும் திசைகள் யாவை?
(1) வடக்கு - தெற்கு
(2) வடகிழக்கு - தென்மேற்கு
(3) கிழக்கு - மேற்கு

**41.** சுத்தமான தண்ணீரைக் கொண்ட பாத்திரத்தில் பனிக்கட்டி ஒன்றை இடும்போது பனிக்கட்டிக்கு நிகழ்வது யாது?
(1) அளவு பெரிதாகும். (2) நீரில் மிதக்கும். (3) எதுவும் நிகழமாட்டாது.

**42.** சர்வதேச விமான நிலையங்கள் இரண்டினைக் குறிப்பிடும் விடை எது?
(1) கட்டுநாயக்க, இரத்மலான
(2) கட்டுநாயக்க, மத்தள
(3) மத்தள, பலாலி

**43.** இலங்கையில் பொது இடங்களில் உள்ள மலசல கூடங்களை ஆண்கள், பெண்கள் என வேறுபடுத்திக் காட்டுவதற்கு எந்தமுறை மிகப் பொருத்தமானது?
(1) நியமக் குறியீட்டு முறை மூலம் காட்டுதல்
(2) சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் காட்டுதல்
(3) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் காட்டுதல்

**44.** பயிர்ச்செய்கைக்கு நன்மையளிப்பது, தீமையளிப்பது என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தேனீ, மண்புழு, வெண்மூட்டைப் பூச்சி ஆகிய உயிரினங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ள சரியான முறையைத் தெரிவு செய்க.


| | நன்மையளிப்பது | தீமையளிப்பது |
|---|---|---|
| (1) | • மண்புழு<br>• வெண்மூட்டைப் பூச்சி | • தேனீ |
| (2) | • மண்புழு<br>• தேனீ | • வெண்மூட்டைப் பூச்சி |
| (3) | • தேனீ<br>• வெண்மூட்டைப் பூச்சி | • மண்புழு |

PAPERMASTER.LK

[பக். 7 ஐப் பார்க்க

**45.** கொவிட் 19 (கொரோனா) நோய் ஏற்படுவது
(1) பற்றீரியா மூலம் (2) வைரஸ் மூலம் (3) பங்கசு மூலம்

**46.** 'துருத்தி' பயன்படுத்தப்படுவது
(1) தச்சுத் தொழிலில் (2) சுரங்கத் தொழிலில் (3) கொல்லன் பட்டறைத் தொழிலில்

**47.** படத்தில் காட்டப்பட்டுள்ள  குறியீட்டின் மூலம் அடையாளப்படுத்தப்படுவது
(1) பெருந்தெரு (2) புகையிரதப் பாதை (3) அதிவேகப் பாதை

**48.** உணவுப் பொருள்களை வாங்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் யாது?
(1) அவை பற்றிக் கவர்ச்சியான வர்த்தக அறிவித்தல் இருத்தல்
(2) அவை அலங்காரமாகப் பொதி செய்யப்பட்டிருத்தல்
(3) அவற்றின் உற்பத்தி, காலாவதி பற்றிய திகதிகள் குறிப்பிடப்பட்டிருத்தல்


**49.** பின்வருவனவற்றுள் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்துவதால் நிகழுவது எது?
(1) நச்சுத் தன்மை அற்ற விளைச்சலைப் பெறுதல்
(2) மண் வளமற்றுப் போதல்
(3) நீர் மாசடைதல்

**50.** யானைக்கால் நோய் பரவுவது
(1) நோய்க்காவி இலையான் மூலமாகும்.
(2) நோய்க்காவி நுளம்பு மூலமாகும்.
(3) நோய்க்காவி தனிநபர் மூலமாகும்.

**51.** மின்னல் தாக்குவதால் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து விலகி இருப்பதற்கு மிகப் பொருத்தமானது
(1) திறந்த வெளியில் தங்கியிருத்தல்
(2) நீர்நிலைகளில் நீராடுதல்
(3) கட்டடத்தின் உள்ளே தங்கியிருத்தல்


**52.** ஒரு குழுவாகச் செயற்படும்போது மிகவும் பொருத்தமானது
(1) ஒருவர் மற்றையவர்களின் கருத்துக்களுக்குச் செவிமடுத்து எப்போதும் அதனுடன் ஒத்துப்போதல்
(2) ஒருவர் எப்போதும் தனது கருத்துக்களை முதன்மைப்படுத்த எத்தனித்தல்
(3) ஒருவர் மற்றையவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்துத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துதல்

**53.** இரண்டு உலர் கலங்கள், கம்பித் துண்டு என்பவற்றைப் பயன்படுத்தி மின்சூள் மின்குமிழை ஒளிரச் செய்வதற்குத் தயார் செய்யப்பட்ட மூன்று சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மின்குமிழ் **ஒளிராதிருக்கும்** எனக் கருதும் சந்தர்ப்பம் எது?



(1) (2) (3)

**54.** நீர் உள்ள ஒரு பாத்திரத்தில் தேங்காயெண்ணெயை ஊற்றி சிறிது நேரத்தின் பின்னர் காணக்கூடிய விதத்தைச் சரியாகக் காட்டும் உரு எது?




(1) (2) (3)

PAPERMASTER.LK

[பக். 8 ஐப் பார்க்க

**55.** வாழை இலையைப் பயன்படுத்தி சோற்றுப் பொதி ஒன்றைத் தயாரிப்பதற்குச் செய்ய வேண்டியது எது?
(1) வாழை இலையைக் கழுவி உலர வைத்தல்
(2) வாழை இலையின் மேற்பகுதியில் பொலித்தீன் தாளை விரித்தல்
(3) வாழை இலையைக் கழுவி மிதமான நெருப்பில் சூடாக்குதல்

**56.** உடலில் வெந்நீர் பட்டு எரிகாயம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாகச் செய்ய வேண்டியது
(1) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் களிம்பு பூசுதல்
(2) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் வழிந்து செல்லுமாறு தண்ணீர் ஊற்றுதல்
(3) எரிகாயம் ஏற்பட்ட இடத்தில் துணியினால் கட்டுப்போடுதல்

**57.** இலங்கையின் தேசிய மரம், தேசியப் பறவை என்பவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) நாகமரம், காட்டுக்கோழி
(2) நாகமரம், நீலப்புள்
(3) நீலோற்பலம், காட்டுக்கோழி

**58.** கைக்குட்டை ஒன்றின் கரையைத் தைப்பதற்கு மிகப் பொருத்தமான தையல் முறை
(1) சங்கிலித் தையல் (2) கம்பளித் தையல் (3) நரம்புத் தையல்

**59.** அவசர நோய் நிலைமையில் அம்புலன்ஸ் வண்டியை வரவழைப்பதற்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சுகப்படுத்தும் சேவையின் தொலைபேசி எண் யாது?
(1) 1090 (2) 1909 (3) 1990

**60.** நண்பர்களோடு காலையிலேயே பாடசாலைக்குச் செல்வதற்காக வந்த நீங்கள் வீதியின் குறுக்கே மரம் ஒன்று விழுந்து கிடப்பதைக் காண்கிறீர்கள். அக்கம் பக்கத்தில் வேறு எவரும் இருக்கவில்லை. எவ்வாறாயினும் பாடசாலை செல்வதே உங்களது நோக்கமாகும். அதன் பின்னர் நீங்கள் செய்யப்போவது யாது என்பதைத் தலைப்பாகக் கொண்டு **மூன்று** வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பு, எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

2. ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

3. ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

***

PAPERMASTER.LK